# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வியாழன்கிழமை 28ம் தேதி சாட்சியாகிய தேவராஜீலு என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி.மம்தா பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தேவராஜீலு | வயது | 67 |
| த/பெ. | கேசவலு | இனம் | ஆண் |
| கிராமம் | திருவள்ளுர் | தொழில் | பணி ஓய்வு |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.87/2023**

( எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.)

**முதல் விசாரணை 28 .08.2025 அ.சா.1**

1. நான் திருவள்ளுரில் வசித்து வருகிறேன். நான் 2017ம் வருடம் அரக்கோணம் உட்கோட்ட அஞ்சலக அலுவலகத்தில் உதவி கண்காணிப்பாளராக பணியாற்றி ஓய்வு பெற்றேன். 2015 முதல் 2017ம் ஆண்டு வரை அரக்கோணம் அஞ்சல் உட்கோட்ட அலுவலகத்தில் உதவி கண்காணிப்பாளராக பணிபுரிந்தேன். மணி த/பெ ஆறுமுகம் என்பவர் 29.08.2010 முதல் 31.10.2011 வரை பழனிபேட்டை துணை ஆஞ்சலகத்தில் துணை அஞ்சலக அதிகாரியாக பணிபுரிந்த போது எதிரி மணியும், ஜானகிராமன் என்பவரும் இணைந்து அக்கவுண்ட் நெம்பர் 505015 என்கிற ஒரு வருட டைம் டெபாசிட் கணக்கை 03.02.2010 அன்று தக்கோலம் துணை அஞ்சலக அலுவலகத்தில் ஆரம்பித்தார். அந்த கணக்கை 15.04.2011 அன்று பழனிப்பேட்டை துணை அஞ்சலக அலுவலகதிற்கு மாற்றம் செய்வதற்காக எஸ். பி 10 (b) படிவத்தை பூர்த்தி செய்து ஜாயிண்ட் அக்கவுண்ட் ஓள்டரான ஜானகிராமனிடம் கையெழுத்து பெறாமல் அன்றைய தினமே ரூபாய் 53,509/- கணக்கை முடித்து அந்த மாறுதல் படிவத்தை அரக்கோணம் தலைமை அஞ்சல் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து அன்றைய தினமே பழனிப்பேட்டை துணை அஞ்சலக அலுவலகத்தில் 477125 என்கிற புதிய மாறுதல் எண்ணை பெற்றுள்ளார்.

2. மேலும் 12.09.2011 அன்று மறுபடியும் எஸ். பி 10 (b) படிவத்தை பூர்த்தி செய்து எதிரி மணி கையெழுத்துயிட்டு பழைய கணக்கு எண்ணான 505015 எண்ணிற்கான

புதிய அக்கவுண்ட் எண் 477155 வழங்கப்பட்டது. 12.09.2011 ம் ஆண்டு தாக்கல் செய்த மாறுதல் படிவத்தையும் ஜாயிண்ட் அக்கவுண்ட் ஓள்டரான ஜானகிராமனிடம் கையெழுத்து பெறாமல் அரக்கோணம் தலைமை அஞ்சலகத்திற்கு அனுப்பி வைத்து அன்றைய தினமே மேற்படி ஜாயிண்ட் அக்கவுண்ட்ல் முறைகேடாக ரூபாய் 53,199/- யை எடுத்துள்ளார். இரண்டாவதாக முறைகேடு செய்த கணக்கு தொகை 53,199 எதிரி மணி அவராக முன் வந்து அரசு கணக்கில் முறைகேடு செய்த ரூபாய் 53,199/- யை செலுத்தி விடுவதாக துறை ரீதியான விசாரணையில் தெரிவித்து 26.09.2011 ல் ரசீது எண் A639 ன் கீழ் பழனிப்பேட்டை துணை அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தினார். 30.08.2016 ம் தேதி அரக்கோணம் அஞ்சலக கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் எதிரி மணி மீது அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் மேற்படி சம்பவம் தொடர்பாக புகார் அளித்து என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகாரில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (என்னிடம் காட்டப்படும் தக்கோலம் துணை அஞ்சலக கணக்கு புத்தகம் எண் 505015, 15.04.2011 ம் தேதி கணக்கு எண் 477125 ல் ரூபாய் 53,509/- எதிரி பணம் எடுத்தற்கான ரசீதும், 12.09.2011 ம் தேதி கணக்கு எண் 477155 ரூபாய் 53,199/- பணம் எடுத்தற்கான ரசீதும் அ.சா.ஆ.2, அ.சா.ஆ.3, அ.சா.ஆ.4 ஆக குறியீட செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தனர். அரசு தரப்பில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்கு அ.சா.1 முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**<u>மறு விசாரணை-</u>**இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I(FAC),
Arakkonam.